நாய்களுக்கு வெறி பிடிக்கக்கூடாது என்பதற்காகத் தடுப்பு ஊசி போடுகிற வகையில் மருந்து தனியாக இருக்கிறது. நாய் வளர்ப்போர் அந்த மருந்தைப் போய் போட்டுக்கொள்ளலாம். நாய் கடித்துவிட்டால் பரிகாரம் இல்லை என்று சொல்வது தவறு. அதற்கான மருந்து இருக்கிறது. அந்த மருந்தை முறைப்படி போட்டால் நிச்சயமாக உயிர் காப்பாற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் பதிப்பு

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''செங்கை மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஐயம்பேட்டை, முத்தியால்பேட்டை, வள்ளுவபாக்கம், வன்னியப் பேட்டை போன்ற கிராமங்களில் உள்ள சாயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் பொது மக்கள் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26ஆவது பிரிவின்படி அன்றாடக் கழிவுநீர்/தொழிற் சாலைக் கழிவுநீரினை வெளியேற்ற செங்கல்பட்டு மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஐயம்பேட்டை, முத்தியால் பேட்டை, வள்ளுவபாக்கம், வன்னியப்பேட்டை போன்ற கிராமங்களில் உள்ள 40 சாயத் தொழிற்சாலைகளி லிருந்து விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தில் பெறப்பட்டன.

வெளுத்தல், பசையிடுதல், சாயம் போடுதல் முதலியன தயாரிப்பு முறைகளாகும். மேற்கண்ட செய்முறைகளின் போது தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. இத்தொழிற்சாலைகள் 2-4-1987 அன்று ஆய்வு செய்யப்பட்ட பொழுது சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீரானது கீழ்கொட்டிவாக்கம் கால்வாயில் விடப்பட்டு தேங்கியிருப்பதும் தெரியவந்தது. தொழிற்சாலைக் கழிவுநீரானது நிறமுடைய தாகவும், இது அதிக அளவில் கரைந்துள்ள திடப் பொருட் களையும், உயிர் இரசாயன உயிரகத்தேவை, இரசாயன உயிரகத் தேவையும் கொண்டுள்ளது. தொழிற்சாலைக் கழிவு நீர் நிலத்திலோ அல்லது நீர் நிலைகளிலோ சுத்திகரிக்கப் படாமல் வெளியேற்றப்பட்டால் அது நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலைகளில் மாசு ஏற்படக் காரணமாகும்.

தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளி விடுவதற்கு இணைந்த கருத்துருவை சமர்ப்பிக்கும்படி தொழிற் சாலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டது. கருத்துரு தொழிற் சாலைகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. கருத்துரு பெற்ற பிறகு தொழிற்சாலைகளின் தகுதி அறிந்து வாரியம் தொழிற் சாலைகளுக்கு அனுமதி வழங்க வேண்டியிருந்தால், நிர்ணயித் துள்ள வரைமுறைகளுக்கேற்ப தொழிற்சாலைகள் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனை யுடன் அனுமதி வழங்கப்படும். தேசீய சுற்றுப்புற பொறி யியல் ஆராய்ச்சி கழகத்திடம் ஒரு பொதுவான சுத்திகரிப்பு முறை பற்றிய திட்டம் கேட்டு அணுகியுள்ளதாக தொழிற்சாலை கள் தெரிவித்துள்ளன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த விவர அறிக்கையில் தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியிடுவதற்கு இணைந்த கருத்துருவை சமர்ப்பிக்கும்படி தொழிற்சாலைகள் கேட்டுக் கொள்ளப் பட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி கழிவு நீரை சுத்தம் செய்யாமல் வெளியிடுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு குடிக்க-குளிக்க போதிய சுகாதாரமான நீர் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே அந்த தொழிற்சாலைகளுக் குள்ள லைசென்சை தற்காலிகமாக ரத்து செய்து சுத்திகரிப்பு ஆலை கட்டி முடித்ததும் லைசென்சை திரும்பக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர்கள் எல்லாம் கைத்தறி துறையைச் சார்ந்தவர்கள். சிறு சிறு சாயப் பட்டறை கள் வைத்திருப்பவர்கள். பெரிய சுத்திகரிப்பு ஆலை தேவை என்று சொன்னால் அவர்களுக்கு பொருளாதார ரீதியில் அது சாத்தியமாக இருக்காது என்று அரசு கருதுகிறது. அதற் காகத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறை முறையிலேயோ அல்லது அரசே முன் வந்தோ அந்த சுத்திகரிப்பு ஆலையைக் கட்ட வேண்டும். அதற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. முதலில் ஏதேனும் ஒரு இடத்தில் கரூரிலோ, சேலத்திலோ அல்லது குமாரபாளையத்திலோ அல்லது வேறு இடத்திலோ அமைத்து அது பயன் உள்ளதாக இருக்குமானால் மற்ற ஊர்களுக்கு விரிவாக்கம் செய்யலாம். அதை காலதாமதம் இன்றி விரைவாக செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். தொழிற்சாலைகளை நிறுத்துவது இப்போது சாத்தியம் இல்லை.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் செய்யும்போது என்னுடைய பகுதியை முதன்மையாக எடுத்துக் கொண்டு விரைந்து செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படுமா ?

1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முதலிலே சுத்திகரிப்பு ஆலையாக ஒரு மாடல் அமைத்துப் பார்க்கும்படி சொல்லி இருக்கிறோம். அது நடக்கட்டும். இடத்தைப் பற்றி அரசு பிறகு முடிவு செய்யும்.

(ஊ) தோப்பூர்-மேட்டூர்-பவானி சாலையில் காவிரி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தில் பழுது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், பொ. உத்திராபதி, எஸ். கோவிந்தசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதை கொண்டுவருவார்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மேட்டூர் அணையில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தில் இரண்டாவது முறையாக விரிசல் ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது, தோப்பூர்-மேட்டூர்-பவானி சாலையில் கி.மீ. 37/2-6-ல் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தை சார்ந்ததாகும். இப்பாலம் 1928ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டு நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. இப்பாலம் 20 மீட்டர் நீளம் கொண்ட 16 கண்கள் உடையதாகும் ஒவ்வோர் கண்ணிலும் இரண்டு இரும்பு முக்கிய கர்டர்களும் (Iron Main Gurders) அதன்மேல் 9 குறுக்கு கர்டர்களும் (Cross Gurders) உள்ளன. இதன்மேல் ஆர்.ஸி.ஸி. பலகை (R.C.C. Slab) போடப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக 1982-ல் இப்பாலத்தில் பழுது ஏற்பட்டு, இதன் மீது பளுவான வாகனங்கள் செல்ல தடை செய்யப்பட்டது. உடனடியாக பரிசீலிக்கப்பட்டு இப்பாலம் ''வலுவிழந்த'' பாலமாக குறிக்கப்பட்டது. இதில் விரிசல்கள் நெடுகே உள்ளன. அண்மையில் 22-3-1987 அன்று மூன்றாவது கண்ணின்மேல் மேல்தளக் கான்கிரீட் சுமார் 2 x 2.2 மீ. அளவுக்கு உடைந்து கீழே இறங்கிவிட்டது. உடனடியாக போக்குவரத்து தடை செய்யப்பட்டது. இப்பழுதை சீர்செய்ய உடனடியாக 12 அங்குல கன மரக் கட்டைகள் தருவிக்கப்பட்டு சீர்செய்யும் பணி முடிக்கப்பட்டு 29-3-1987 அன்று முதல் கார்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள் போன்ற பளு இல்லாத வாகனங்கள்